Series : X4YZW

SET ~ 4

रोल नं.

Roll No.

प्रश्न-पत्र कोड
Q.P. Code **6**

परीक्षार्थी प्रश्न-पत्र कोड को उत्तर-पुस्तिका के मुख-पृष्ठ पर अवश्य लिखें।
Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : 3 மணி* — *மொ. மதிப்பெண்கள் : 80*

*Time allowed : 3 hours* — *Maximum Marks : 80*

**नोट / NOTE**

(I) இந்த வினாத்தாளில் அச்சிடப் பெற்ற **15** பக்கங்கள் உள்ளதைச் சரி பாரார்க்கவும்.
Please check that this question paper contains **15** printed pages.

(II) இந்த வினாத்தாளில் **15** வினாக்கள் உள்ளனவா எனச் சரி பார்க்கவும்.
Please check that this question paper contains **15** questions.

(III) வினாத்தாளின் வலது பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Q.P. Code) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்
Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.

(IV) எழுதத் தொடங்குவதற்கு முன் வரிசை எண்ணைக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடவும்.
**Please write down the serial number of the question in the answer-book at the given place before attempting it.**

(V) வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந் நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.
15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the candidates will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

~

**General Instructions :**

*பொதுவான வழிமுறைகள் :*

1. This question paper contains **FIVE** Sections.

   *இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.*

2. *It has total **15** questions.*

   *இவ் வினாத்தாள் **15** கேள்விகளைக் கொண்டுள்ளது.*

3. **Section A :** Contains **2** Questions. [Question Number from **1** to **2**]

   *பிரிவு அ – **2** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **1** முதல் **2** வரை]*

4. **Section B :** Contains **4** Questions. [Question Number from **3** to **6**]

   *பிரிவு ஆ – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **3** முதல் **6** வரை]*

5. **Section C :** Contains **4** Questions. [Question Number from **7** to **10**]

   *பிரிவு இ – **4** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **7** முதல் **10** வரை]*

6. **Section D :** Contains **2** Questions. [Question Number from **11** to **12**]

   *பிரிவு ஈ – **2** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **11** முதல் **12** வரை]*

7. **Section E :** Contains **3** Questions. [Question Number from **13** to **15**]

   *பிரிவு உ – **3** வினாக்களைக் கொண்டுள்ளது. [வினா எண் **13** முதல் **15** வரை]*

8. Attempt as per specific instructions for each Question.

   *ஒவ்வொரு வினாக்களின் தலைப்புகளிலும் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

9. Please write down the serial no. of the question in the answer book before attempting it.

   *பதிலளிக்கும் முன்பு வினா எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறிப்பிடுக.*

~

## பகுதி – அ (படித்தல் – 10 மதிப்பெண்கள்)

## SECTION – A (Unseen Passage – 10 Marks)

1. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு விடை தருக : **5 × 1 = 5**

மயிலை சீனி. வேங்கடசாமி 16.12.1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். தந்தை சீனிவாசன் ஒரு சித்த மருத்துவராகவும் அவருடைய தமையனார் கோவிந்தராசன் தமிழாசிரியராகவும் விளங்கியமையால் இளமையிலேயே தமிழின் மீது தணியாத பற்றும் நுணுகி ஆராயும் திறனும் பெற்றவராய்த் திகழ்ந்தார். "தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக்கிடைத்த சீதனம்" என்று அவர் அடிக்கடி கூறுவார். கட்டுரையோ நூலோ எழுதும் முன் தரவுகளைச் சேகரித்து, தமது ஆய்வுக்கு ஏற்றதை ஒப்பிட்டு ஐயமிருப்பின் மற்றவர்களைக் கேட்டு தெளிந்த பிறகே வெளியிடுவார். விபுலானந்த அடிகள், கா. சுப்பிரமணியர், திரு. வி.க., தெ.பொ.மீ., ச.த. சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக அவரது ஆய்வுக்கட்டுரைகள் குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, லஷ்மி, ஆரம்பாசிரியன் முதலான இதழ்களில் வெளியாகின.

சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தைக் களப்பிரர்கள் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். இக்காலம் தமிழர்களின் வரலாற்றில் இருண்டகாலம் என்று சொல்லப்படும். இம் மன்னர்கள் குறித்து ஆய்வொன்றை செய்து, 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூலை எழுதினார். பன்மொழி புலமை பெற்ற இவரின் 'அஞ்சிறைத்தும்பி' என்ற சொல்லாய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு 'செந்தமிழ்ச்செல்வி' என்னும் இதழில் வெளியிடப்பட்டது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் பாராட்டப் பெற்ற இவர்க்கு 'தமிழ் பேரவைச் செம்மல்' என்ற விருதினை மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வழங்கி பெருமைப்படுத்தியது. வேண்டாத நூலிது என்றோ நூலில் வேண்டாத பகுதி இது என்றோ ஒதுக்க முடியாத வகையில் இவரது எழுத்தாளுமை திகழ்ந்தது.

~

**வினாக்கள் :**

I. 'தமிழ்ப்பற்று முன்னோர் வழியாக எனக்குக் கிடைத்த சீதனம்' என்று கூறியவர் யார்?

(A) திரு. வி.க. (B) விபுலான்ந்தஅடிகள்

(C) மயிலை சீனி. வேங்கடசாமி (D) தெ.பொ.மீ.

II. தமிழக வரலாற்றின் இருண்ட காலம் என எதனை அழைப்பர்?

(A) பாண்டியர் காலம் (B) சேரர் காலம்

(C) நாயக்கர் காலம் (D) களப்பிரர் காலம்

III. 'களப்பிரர்கள் ஆட்சியில் தமிழகம்' – என்ற நூலை எழுதியவர் யார்?

(A) தெ.பொ.மீ. (B) மயிலை சீனி. வேங்கடசாமி

(C) கா.சுப்பிரமணியர் (D) மறைமலை அடிகள்

IV. 'தமிழ் பேரவைச் செம்மல்' – என்ற விருதினை மயிலை சீனி. வேங்கடசாமிக்கு எப்பல்கலைக் கழகம் வழங்கியது?

(A) பாரதியார் பல்கலைக்கழகம்

(B) அண்ணா பல்கலைக்கழகம்

(C) அழகப்பா பல்கலைக்கழகம்

(D) மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

V. 'அஞ்சிறைத்தும்பி' – என்று தொகுப்பு எவ்விதழில் வெளியிடப்பட்டது?

(A) குடியரசு (B) ஊழியன்

(C) செந்தமிழ்ச்செல்வி (D) ஆரம்பாசிரியன்

~

2. கீழ்க்காணும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : **5 × 1 = 5**

கவிதை என்பது யாது? உலகத்தில் இலக்கியம் தோன்றிய காலந்தொட்டே இக்கேள்வியும் தோன்றியுள்ளது. இக்கவிதையைப் பற்றி ஒருசிலர் கூறும் விளக்கங்களைப் பார்ப்போம். 'கவிதை இது அல்ல, அது அல்ல, என எளிதில் கூறிவிடலாம். ஆனால் இன்னது தான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல' என்று ஜான்சன் அக்கவிதையைப்பற்றி தன் விளக்கத்தைப் பதிவு செய்கிறார். கோல்ரிட்ஜ் என்ற அறிஞனோ சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம், சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பதுதான் கவிதை என்று தன்பங்குக்கு விளக்கத்தை வைக்கிறார். ஒரு சிலர் 'பூமியில் காலை ஒற்றி ஒற்றி நடவாதபடி, மேலாகப் பறந்து செல்வதுபோல அமைத்து தெய்வ ஆவேசத்தால் குறிசொல்வது போல இருத்தல்' தான் சிறந்த கவிதை என்கின்றனர். கவிதை ஒருகலை என்றாலும் அதன் தலையாயகோக்கம் இன்பம் விளைவிப்பதே ஆகும். வாக்கினில் தெளிவு இருக்குமானால் வார்த்தையிலும் தெளிவு இருக்கும். அவ்வார்த்தைகள் விழும் கவிதையிலும் தெளிவு இருக்கும். இதனை தான் பாரதி, 'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் – வாக்கினில் ஒளி உண்டாகும்' என்றான். எனவே ஓடுகின்ற நன்னீர் தெளிவாய் இருப்பதுபோல கவிதையும் தெளிவாய் இருத்தல் வேண்டும்.

வினாக்கள் :

I. வாக்கினில் எப்போது ஒளி உண்டாகும்?

II. கவிதையைப் பற்றி ஜான்ஸன் கூறும் கருத்து யாது?

III. வசனம் என்பது என்ன?

IV. கவிதையின் தலையாய நோக்கம் எது?

V. கவிதை எது போன்று தெளிவாய் இருத்தல் வேண்டும்?

~

## பகுதி-ஆ (இலக்கணம் – 12 மதிப்பெண்கள்)

## SECTION – B (Grammar – 12 Marks)

3. பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக : *(எவையேனும் 3 மட்டும்)* **3× 1 = 3**

I. காற்று மாசுபாடு குரித்துக் களந்துறையாடி விழிப்புனர்வு பெறுதல்.

(A) காற்று மாசுபாடு குறித்துக் களந்துறையாடி விளிப்புணர்வு பெறுதல்.

(B) காற்று மாசுபாடு குறித்துக் கலந்துறையாடி விளிப்புணர்வு பெறுதல்.

(C) காற்று மாசுபாடு குறித்துக் களந்துறையாடி விழிப்புணர்வு பெறுதல்.

(D) காற்று மாசுபாடு குறித்துக் கலந்துரையாடி விழிப்புணர்வு பெறுதல்.

II. இயற்கையைப் பற்றி விவறித்தும் வருனித்தும் எழுதுக.

(A) இயற்கையைப் பற்றி விவரித்தும் வருணித்தும் எழுதுக.

(B) இயர்கையைப் பற்றி விவறித்தும் வருனித்தும் எழுதுக.

(C) இயற்கையைப் பற்றி விவறித்தும் வறுணித்தும் எழுதுக.

(D) இயற்கையைப் பற்றி விவரித்தும் வருனித்தும் எழுதுக.

III. நீறின்றி அமையாது உளகு.

(A) நீரின்றி அமையாது உழகு.

(B) நீறின்றி அமையாது உலகு.

(C) நீரிண்றி அமையாது உலகு.

(D) நீரின்றி அமையாது உலகு.

IV. யாழ் இசை கேட்டு இண்புற்றான்.

(A) யாள் இசை கேட்டு இன்புற்றாண்.

(B) யால் இசை கேட்டு இண்புற்றான்.

(C) யாழ் இசை கேட்டு இன்புற்றான்.

(D) யாள் இசை கோட்டு இண்புற்றான்.

V. விதை ஒண்று போட்டால் சுரை ஒன்று முலைக்குமா?

(A) விதை ஒன்று போட்டால் சுறை ஒன்று முளைக்குமா?

(B) விதை ஒண்று போட்டாள் சுரை ஒன்று முளைக்குமா?

(C) விதை ஒன்று போட்டால் சுறை ஒன்று முளைக்குமா?

(D) விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?

4. வல்லின மெய்யிட்டுத் திருத்திய தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக. (மூன்று மட்டும்)) **3 × 1 = 3**

I. அந்த கதவின் பூட்டு சாவியைக் கொடு.

(A) அந்தக் கதவின் பூட்டு சாவியை கொடு.

(B) அந்தக் கதவின் பூட்டுச் சாவியைக் கொடு.

(C) அந்த கதவின் பூட்டு சாவியை கொடு.

(D) அந்த கதவின் பூட்டுச் சாவியைக் கொடு.

II. பாவை பச்சை பட்டுடுத்தி பள்ளிக்கு சென்றாள்.

(A) பாவை பச்சைப் பட்டுடுத்திப் பள்ளிக்கு சென்றாள்.

(B) பாவை பச்சைப் பட்டுடுத்தி பள்ளிக்கு சென்றாள்.

(C) பாவை பச்சைப் பட்டுடுத்தி பள்ளிக்குச் சென்றாள்.

(D) பாவை பச்சைப் பட்டுடுத்தி பள்ளிக்கு சென்றாள்.

~

III. அங்கு செல்லும் பையன் எதனைத்தேடி அங்கு செல்கின்றான்.

(A) அங்குச் செல்லும் பையன் எதனைத்தேடி அங்குச் செல்கின்றான்.

(B) அங்கு செல்லும் பையன் எதனைதேடி அங்குச் செல்கின்றான்.

(C) அங்கு செல்லும் பையன் எதனைதேடி அங்கு செல்கின்றான்.

(D) அங்குச் செல்லும் பையன் எதனைதேடி அங்கு செல்கின்றான்.

IV. பத்துபாட்டும் எட்டுதொகையும் சங்கக்கால இலக்கியங்கள்.

(A) பத்துப்பாட்டும் எட்டுதொகையும் சங்ககால இலக்கியங்கள்.

(B) பத்துபாட்டும் எட்டுத்தொகையும் சங்கக்கால இலக்கியங்கள்.

(C) பத்துபாட்டும் எட்டுதொகையும் சங்ககால இலக்கியங்கள்.

(D) பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்ககால இலக்கியங்கள்.

V. முத்துகுமாரசாமி பிள்ளைத்தமிழ்

(A) முத்துக்குமாரசாமிப் பிள்ளைதமிழ்

(B) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

(C) முத்துகுமாரசாமி பிள்ளைதமிழ்

(D) முத்துகுமாரசாமிப் பிள்ளைதமிழ்

5. எடுத்துக் காட்டு எழுதுக : (மூன்று மட்டும்) **3 × 1 = 3**

I. தன்வினை.

(A) மலர் விழி படிப்பித்தாள்.

(B) மலர் விழி படிப்பாளா?

(C) மலர் விழி படித்தாள்.

(D) மலர் விழி படித்திலள்.

~

II. செயப்பாட்டு வினை

(A) கரிகாலனா கல்லணையைக் கட்டினான்?

(B) கல்லணை கரிகாலனால் கட்டப்பட்டது.

(C) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

(D) கல்லணையைக் கரிகாலன் கட்டினான்.

III. கலவை வாக்கியம்.

(A) மணியும் சோமுவும் வந்தனர்

(B) மோகன் போட்டியில் பங்குபெற்றான்; வெற்றிபெற்றான்.

(C) மோகன் போட்டியில் பங்குபெற்று வெற்றிபெற்றான்.

(D) மணி வென்றான்.

IV. நேர்க் கூற்று.

(A) 'நான் நாளை கல்லூரிக்குச் செல்ல உள்ளேன்' என்று கண்ணன் தன் தங்கையிடம் கூறினான்.

(B) தான்மறுநாள் கல்லூரிக்குச் செல்லவுள்ளதாக
தன் தங்கையிடம் கண்ணன் கூறினான்.

(C) கண்ணன் நாளை கல்லூரிக்குச் செல்வான்

(D) நாளை காலை கல்லூரிக்குச் செல்லப் போவதாகக் கண்ணன் கூறினான்,

V. உடன்பாட்டு வினை

(A) நான் பாடம் படித்தலன்

(B) நான் பாடம் படித்தேன்

(C) நான் பாடம் படித்தேன் அல்லேன்

(D) நான் பாடத்தைப் படிக்கவில்லை

~

6. வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக (மூன்று மட்டும்): **3× 1 = 3**

I. (A) இங்குள்ளவை யெல்லாம் நல்ல நூற்களே

(B) இங்குள்ளவை யெல்லாம் நல்ல நூலே

(C) இங்குள்ளது எல்லாம் நல்ல நூலே

(D) இங்குள்ளது எல்லாம் நல்ல நூற்களே

II. (A) அமலன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றார்

(B) அமலன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றேன்

(C) அமலன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றான்

(D) அமலன் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றவர்

III. (A) வாகனத்தை இடப்பக்கம் திருப்பாதே

(B) வாகனத்தை இடதுபுறம் திருப்பாதே

(C) வாகனத்தை இடதுபக்கம் திருப்பாதே

(D) வாகனத்தை இடத்திசையில் திருப்பாதே

IV. (A) அந்த மாந்தோட்டத்தில் தான் எப்போதும் விளையாடுவேன்

(B) அந்த மாந்தோட்டத்தில் தான் எப்போதும் விளையாடுகிறேன்

(C) அந்த மாந்தோப்பில்தான் எப்போதும் விளையாடுவது

(D) அந்த மாந்தோப்பில் தான் எப்போதும் விளையாடுவேன்

V. (A) ஒன்றோ அல்லது இரண்டோ பெறுக.

(B) ஒன்றோ இரண்டோ பெறுக.

(C) ஒன்று இல்லன்னா இரண்டு பெறுக.

(D) ஒன்னோ இரண்டோ பெறுக.

~

## பகுதி – இ (இலக்கியம் – 31 மதிப்பெண்கள்)

## SECTION – C (Main Course Book – 31 Marks)

7. பின்வரும் செய்யுள் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி : **5 × 1 = 5**

பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழாஅது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோள் எவ்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் தேரே வெண்கல் உப்பு எனச்
சேரி விலைமாறு கூறவின்

**வினாக்கள் :**

I. இச்செய்யுள் இடம் பெற்றுள்ள நூல் எது ?

(A) அகநானூறு (B) புறநானூறு

(C) நெடுநல்வாடை (D) கலித்தொகை

II. இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(A) கணியன் பூங்குன்றனார் (B) அம்மூவனார்

(C) ஓதலாந்தையார் (D) நப்பசலையார்

III. இப்பாடல்வரிகள் எத்திணைக்குரியவை ?

(A) குறிஞ்சி (B) முல்லை

(C) பாலை (D) நெய்தல்

~

IV. உமணர் மகள் உப்புக்கு மாற்றாக எதனைக் கேட்டாள்?

(A) வெல்லம் (B) அரிசி

(C) நெல் (D) மீன்

V. எல்வளை பொருள் தருக.

(A) ஒளிபொருந்திய வளையல்

(B) ஒலிமிகுந்த வளையல்

(C) வெண்மையான வளையல்

(D) சங்காலான வளையல்

8. பின்வரும் பத்தியை படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி : **5 × 1 = 5**

இயற்கையானது சமநிலையோடு இருந்தால் தான் அந்தந்தப் பருவநிலைக் கேற்ற நிகழ்வுகள் நடக்கும். மாறாக அது சமநிலையை இழக்கும் போது இயல்பான பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது. இதன் காரணமாகப் புயல், பெருமழை, பெருவெள்ளம், புவிவெப்பமாதல் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கின்றன. இயற்கையைப் போற்றுகிற சமூகமாகத் தமிழ்ச் சமூகம் என்றைக்கும் இருந்து வருகிறது. 'மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்' என்றும்' 'நீரின்றி அமையாது உலகு' என்றும் மழையைக் கொண்டாடிய நாம், இன்று புயல், மழையைப் பற்றிய அறிவிப்புகளைக் கேட்டாலே ஒரு வித அச்ச நிலைக்கு ஆட்படுகிறோம். அதுவும் நிஷா, தானே, வர்தா, ஒக்கி, கஜா முதலான பெரும்புயல்களால் பாதிக்கப்பட்ட நாம் இன்றும் இயற்கைக்கு எதிராகவே செயல்பட்டுவருகின்றோம். மனிதன் தன் பேராசை காரணமாக இயறை்க

~

வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான். இதனை நன்கு உணர்ந்த இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர், 'டேவிட்கிங்' புவிவெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார். இயற்கையைக் காப்பது நமது கடமையாகும்.

*வினாக்கள்:*

I. *அந்தந்தப் பருவநிலைக்கேற்றி நிகழ்வுகள் எப்போது இயல்பாக நடக்கும்?*

II. *இயல்பான பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகள் யாவை?*

III. *நம் நாட்டைப் பாதித்த ஒரு சில புயல்களின் பெயர்களை எழுதுக.*

IV. *தமிழ்ச் சமூகம் இயறகையை எவ்வாறு போற்றியது?*

V. *'டேவிட்கிங்' என்ற அறிவியல் கருத்தாளர் கூறியது யாது?*

9. *பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடை எழுதுக :* **2 × 3 = 6**

I. *குளிர்கால கொடுமையினை நக்கீரர் எவ்வாறு எடுத்துரைகின்றார்?*

II. *'அன்புள இனிநாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'– இடம் சுட்டிப் பொருள் விளக்குக.*

III. *கந்த வேளிடம் இராமலிங்க அடிகளார் வேண்டுவன யாவை?*

IV. *இல்வாழ்க்கையின் சிறப்பினை வள்ளுவர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?*

~

10. பின்வரும் உரைநடை வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு விடையளி : **3× 5 = 15**

I. தொடரியல் போக்குகள் குறித்து தி.சு நடராசன் கூறுவன யாவை ?

II. இன்றைய சென்னை நகரம் பற்றிய செய்திகளைத் தொகுத்து வரைக.

III. தமிழக நீர் நிலைகள் குறித்தும் அவற்றின் பாதிப்பால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் 'கவின்மலர்' கூறுவன யாவை ?

IV. தாய்வழிக் குடும்பம் பற்றிய செய்திகளைத் தொகுத்து வரைக.

V. சென்னை நகர உருவாக்கம் பற்றி எழுதுக.

பகுதி –ஈ (துணைப்பாடம் – 12 மதிப்பெண்கள்)

**SECTION – D (Non-detail – 12 Marks)**

11. ஏதேனும் ஒரு தலைப்பில் துணைப்பாடக் கட்டுரை எழுதுக : **1 × 7 = 7**

I. உரிமைத் தாகம்

II. முதல் கல்

III. தலைக்குளம்

12. கீழக்காணும் கதை மாந்தரில் ஒருவரின் பண்பு நலனை எழுதுக. **1 ×5 = 5**

I. மருதன்

II. மாரி

~

## பகுதி – உ (படைப்புத்திறன் – 15 மதிப்பெண்கள்)

## SECTION – E (Creative Writing – 15 Marks)

13. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக. **1 × 6 = 6**

I. தவணை முறையில் பொருள்கள் வாங்குவதை தவிர்க்குமாறு உன் தங்கைக்குக் கடிதம் வரைக.

II. புது வீட்டுக்கு மின் இணைப்பு வேண்டி மின்சார வாரியத்திற்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

(இரு கடிதங்களுக்கும் உன் முகவரி ப. அழகன்/ப. அழகம்மை, 58, கபிலர் சாலை, திருக்கோவிலூர்-605757)

14. உன் பள்ளியில் படித்து உன்பள்ளிக்கே முதல்வராக வந்துள்ள உன் பள்ளி முதல்வரை நேர்காணல் செய்க. **1 × 3 = 3**

15. பின்வரும் தலைப்புகளுள் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக. **1 × 6 = 6**

I. அ. மகளிர் முன்னேற்றம்

II. ஆ. கோடை காலங்களில் உடலோம்பும் முறை

III. இ. யாதும் ஊரே யாவரும் கேளிர்.

---

~